சாலவுயர்துரியனிற்கையினாலாங்காரந்
தானான்மாவன்றாகிலசேதனவாங்காரஞ்
நீலமுறுபுறவிடயமறிவதேனெனினா (௧௦௪)
நிக்கலின்முன்னாசிசேட்டித்திடுதல்போலும்

வெயிலினிடைக்காட்டுபடிமக்கலமுண்மனையை
விளக்குதல்போலுந்துரியன்றனதிருஞ்சந்நிதியு
மியலுறுதற்சைதன்னியப்பதிவிம்பந்தன்பா
லெய்தலும்பெற்றிடுதலினாலச்சடவாங்காரம்
பயில்விடயவுணர்வினொடுநனவுகனவுழன்று
பகர்சுழுத்திதனிலடங்குமவ்வழக்கமுறைப்பிற்
செயிர்தருமாங்காரமடங்குறுசுழுத்திதன்னிற் (௧௦௫)
செறியவித்தையுட்சுவருந்துயிற்கதவுமன்றி.

நடுக்கமறுந்தீபமாந்தனைத்தானேவிளக்க
னவில்பிரத்திகான்மாவின்சோதியாம்பின்னர்த்
தொடக்கிவருகாலகருமாதிசமீரணனாற்
றுயிற்கதவந்திறந்திடவவ்வவத்தையதுதன்னி
னடுக்குமுதலவத்தைமகதத்துவமாந்தெற்றி
யடுத்திருந்தாங்காரமெனும்வெண்பளிங்குமணிதான்
படைத்தலருந்துரியசுடர்ப்பதிவிம்பம்பதியப் (௧௦௬)
பட்டுளம்போற்சீவனென்னவேநின்று

சொற்பனமாகுமனையவிளக்கியேபொறியாஞ்
சுருங்கையினிற்போந்தனவெனுமுன்றில்விளக்கு
முற்பகருங்காலகருமாதிசமீரணருடன்
மூடனுமத்துயிற்கதவங்காரியமாங்கார
ணற்படிகமணியவித்தைதனிலடங்கச்சென்று
னவுகனவெனுமுன்றின்மனைகணிருந்தந்
தற்படிகமணிகளுவுமறிவொளிதன்முதலாந்
தனித்துரியவிளக்கையடைந்தேகமாமன்றே. (௧௦௭)

இத்திறமிங்கதனினதுபாவாபாவங்க
ளிலங்குநனவாதிகளினவிகாரமாகி
யுய்த்துணருமுயிர்வேறன்றிருத்தலின்றென்று
முரைத்தவகமான்மாவன்றெனவறிகபுறம்பு
வைத்தவிடயங்கடனக்கான்மாவாய்ப்பரமான்
மாவிற்குவேத்தியமாதலிற்சடாசடமா
யத்தமதின்முன்பின்போலொளியலதாயகந்தைக்
காகுஞ்சிற்சாயையான்மாவுடனும்புணர்ச்சி. (௧௦௮)

வெப்பினேறுனெனலாற்சிற்பதிவிம்பந்தான்
மேவுமாங்காரசம்பந்தத்திறற்றால
மெய்ப்படுவவெம்மைமுதலனவறிதல்கரும
வினைவாதிக்கருமசமானாணமிந்தெனனலாற்
றப்பரியசிற்சாயையுடனவ்வாங்கார
சம்பந்தஞ்சிருட்டிமுதன்முத்தியளவாதிப்
பொய்ப்பரியவியல்பாகுநான்கருத்தனெனலாற்
புணர்ச்சியிலான்மாவினுடனையதின்சம்பந்தம். (௧௦௯)

இசைப்பிலதுபிராந்திசென்னியமாகுமென்று
மிவைமுழுதுஞ்செப்புதிரிசயவிவேகந்தான்

மிசைப்புகல்வவஞ்ஞானமாவரணமிக்க
விட்சேபம்பரோட்சமபரோட்சஞானம்பின்
வசைப்படுதலுறுஞ்சோகநிவிர்த்தியின்மீது
வருநிரங்கிசதிருத்தியெனுமவத்தையேழாங்
இசைப்புறுதலுறுஞ்சீவர்க்கானவாயிவற்றின்
றிறமனைத்துமுறைபிறழாதினிதெடுத்துமொழிவாம். (௧௧௦)

புன்னெறிகொள்குடும்பியாய்வலியதுமோர்சித்துப்
போலியாஞ்சீவனுயர்சுருதிவிசாரத்தின்
முன்னமொருதன்சொருபமாகியபேரொளியா
முதற்றுரியநிலையறியாதிருந்திடலஞ்ஞானம்
பின்னொருகாலுயிரியல்புகூறுமிடத்தின்று
பிரத்திகான்மாத்தோன்றுதெனுங்கலக்கமிரண்டும்
பன்னியவஞ்ஞானகாரியமாகுமென்னப்
பகர்தருமாவரணமென்பர்பலகலைகற்றுணர்ந்தோர். (௧௧௧)

கருத்தனுமொன்கருமபலபோத்துருவுந்தானெய்க்
கருதியுடம்பபிமானியாஞ்சீவன்றனே
யுரைத்தலரும்விட்சேபஞ்சுருதிகுருவுன்மை
யுரையாலுன்றுயிரொனவேயறிதலசத்தென்று
நிரைத்தமுதலாவரணநிவர்த்தகமாம்பரோட்ச
ஞீபிரமமெனும்வேதமொழிவிசாரத்தால்
வரத்துரியன்றனைவேயறிதலபரோ
வரணநிவர்த்தகமாகுமபரோட்சஞானம். (௧௧௨)

துரியநிலையடைந்ததற்பின்னுன்கருத்தனென்போத்
துருவென்னுஞ்சீவவுருத்துக்கமகன்றிடுத
லரியதெனுமச்சோகநிவிர்த்தியாஞ்செய்தே
யடைதலுறும்பலனைத்துமடைந்தனமென்றமைதல்

பரிவினிரங்கிசதிருத்தியிரண்டுமபரோட்ச
பலமாகுமறிவுருவாமான்மாவிற்கென்றுந்
தெரியுமபரோட்சமுளதாதலினலவற்குச்
சேர்தலெவ்வாறஞ்ஞானமுதலனவிங்கென்னில். (௧௧௩)

கடந்துநதிபதின்மர்தமையெண்ணுங்காலொருவன்
கண்டுநவபுருடரைப்பத்தாமவன்றானெனவே
யடைந்தறியாதிருத்தலேயஞ்ஞானம்பத்தா
மவனிலைகாணப்படானென்னுமிருபிராந்தி
யிடும்பைதருமாவரணநதியுளவனிறந்தா
னெனுந்துக்கம்விட்சேபம் வேறரியன்மொழியாற்
கிடந்ததொருதுறக்கமெனவுளனெனவேயறிதல்
கிளர்ந்தவவனிலையென்றலொடுபகைத்தல்பரோட்சம் (௧௧௪)

சங்கநவபுருடரொடுமுறையெண்ணிநீயே
தசமனென்றத்தனைத்தானே யிருந்தபடியடுத்த
விங்குவருதசமன்காணப்படானெனலோ
டிகலுமபரோட்சமாநதியுளிறந்தனனென்
றங்குவருதுயரகறல்சோகநிவிர்த்தியதா
மடைந்துதனதியனிலையிற்சுகித்திருத்தலானே
துங்கநிரங்கிசதிருத்தியென்றறிகவினிமேற்
றொல்வேதவாக்கியமாம்விசாரமெடுத்துரைப்பாம். (௧௧௫)

விரிந்தவிதிநிடேதஞ்சித்தார்த்தபோதகமாய்
வேதவாக்கியமூன்றுதிறனாகுமவற்றுள்
வருந்திமகமுதலனசெய்கென்றல்விதிவிடுக
மதுபானாதிகளென்கைநிடேதம்விதியின்றித்
திருந்துசிவவுயிரயிக்கப்பொருடனையேதெருட்டல்
சித்தார்த்தபோதகவாக்கியமாகுமென்பர்

பொருந்துமறைநான்கினுநான்குளவாஞ்சித்தார்த்த
போதகமாகியமகாவாக்கியங்களன்றே. (௧௧௬)

உரைத்தலையுட்சிறந்தன்றுசாமமறைபுகலு
மோங்குதத்வமசிமகாவாக்கியமங்கதற்குப்
பரத்தலுறுதற்பதந்தொம்பதத்தொடசிபதமாய்ப்
பதமூன்றுஞ்சிவமுயிரங்கவற்றயிக்கமுறையே
யருத்தமெனலாம்பதமேபதார்த்தமொடுவாக்கி
யார்த்தங்கடமக்குச்சம்பந்தமுறைமூன்றும்
விரிக்கிலவைதாஞ்சமானாதிகரணம்பின்
விசேடவிசேஷியமிலக்கியமொடிலக்கணமாம். (௧௧௭)

அறைதலுறுபதார்த்தங்கட்கிருபொருளிங்குளவா
மவைவாச்சியார்த்தமிலக்கியார்த்தமெனவவற்றுண்
முறைமைதருவிராட்புருடன்முதலாகிநின்ற
மூவுருவவீசனுமப்பிரமமுமொன்றாகிப்
பிரிதலறநிற்புழிதற்பதத்திற்கெய்துறுவ
பெயர்வாச்சியார்த்தமுக்கியார்த்தமபிதார்த்த
நெறிகொள்விசுவாதிகளுந்துரியனுமொன்றாகி
நிற்புழிதொம்பதத்திற்குவருமம்மூவகையும். (௧௧௮)

தற்பதத்தினுக்குவிராட்புருடாதியகன்ற
தனிநிருபாதிகப்பிரமமேயிலக்கியார்த்தஞ்
சொற்பரவுஞ்சோதிததற்பதார்த்தமெனநிற்குந்
தொம்பதத்திற்குற்றவிசுவாதிகளின்வேறும்
பொற்பினிருபாதிகமாந்துரியனிலக்கியார்த்தம்
பொருந்துறுசோதிததொம்பதார்த்தமெனலாகும்
விற்பரவுமிலக்கணைவிட்டதுவும்விடாததுவும்
விட்டுவிடாததுவுமெனமூவகையாமன்றே. (௧௧௯

கங்கையினிலிடைச்சேரிமருவலுறுஞ்சொல்லுங்
கவின்குந்தமொடுசோயந்தேவதத்தனென்னு
மிங்கிவைகளுதாரணமாமவற்றினுக்குக்கங்கை
யெனுமொழிநீர்வடிவாந்தன்முக்கியார்த்தத்தைத்
தங்குமிடைச்சேரிதனக்கிடமாகாமையினாற்
றணந்துகரைகாட்டுந்தன்முக்கியார்த்தத்தைத்
துங்கமுறுகுந்தமொழிவிடாமற்குந்தத்தைச்
சுமப்பவனைக்காட்டுமெனவுணர்ந்திடுகதுணிந்தே. (கஉ௰)

முன்னமொழிதருஞ்சோயந்தேவதத்தனென்னு
மொழியுண்முதலவனென்னுமொழியிறந்தகாலந்
தன்னில்வருதேசவயோவிசிட்டனாந்தேவ
தத்தனைக்காட்டிடுமிவனென்மொழிநிகழ்காலத்தி
னுன்னவருமவையுடையதேவதத்தன்றன்னை
யுணர்த்திடுமிவ்விருத்ததருமப்பொருள்களிரண்டு
மன்னுதல்செயயிக்கழ்முமையினாலப்பொருட்கண்
வருவிருத்ததருமங்களனைத்தினையும்விட்டே. (கஉக)

விருத்தமுறுந்தருமமாந்தேவதத்தன்றனையே
விடாதுகொளினவனிவனேயிவனவனேயென்னுந்
தெரித்தலரிதாயதாதான்மியங்கூடுறுமாற்
றேரினிதைவிட்டுவிடாவிலக்கணையினொடுதா
னருத்தவிலக்கணைபாகத்தியாகவிலக்கணையென்
றறைதலினுமிதுவேதத்துவமசிவாக்கியத்திற்
குரைத்திடுவருதாரணமாயுரியதெனவுண்மை [ம்
யுணர்ந்துடையோரஃதெவ்வாறெனின்முறையேயுரைப்பா
தற்பதம்வாச்சியார்த்தமாயெலாமறிதன்முதலாஞ்
ற்குணங்கொள்பரோட்சனுஞ்சிவன்றனையேயுணர்த்து

[ந]ற்பகருந்துவம்பதமுக்கியமாய்ச்சிற்றுணர்வு
[மு]தலாயவினைகுணவிசிட்டவபரோட்ச
[க]ற்பிதசிவனையுணர்த்துமிம்முரண்கொள்பொருட்கே
[த]த்துவங்கூடாமையினவ்விருபொருளுமடையும்
[ப]ற்பலவாம்பரோட்சமுடனபரோட்சமாகும்
[வ]கைத்ததருமத்திறங்களனைத்தினையும்விட்டே. (கஉந)

[இ]கலிலாவறிவுமாத்திரமாகிநின்ற
விலக்கியமாம்பிரமகூடத்தவுயிர்கொள்ளிற்
புகரிலாவதுவிதுவேயிதுவதுவேயென்னப்
பொருந்துதாதான்மியம்வந்துறுமெனவேயறிகப்
பகவிலாவசிபதமிவ்விலக்கியார்த்தத்திற்
பரோட்சவபரோட்சங்கள்மாயாகற்பிதமென்
றகவிலாதுணர்த்தியுறுபலமாமிம்முறையா
லொன்றுகுமறிவேயுண்டெனல்வாக்கியார்த்தம். (கஉச)

தூயதத்துவமசிமாவாக்கியத்தினாலே
துரியபரற்குளதேகத்துவமென்கைகடாதி
யாயவுபாதிகளகற்றிவிசும்பொன்றேயெனவு
மகற்றிமநுடத்தன்மையிராமனைநீதானே
மாயவன்காணெனவுங்கன்னனைவேடுகழித்து
மகன்குந்திக்கெனவுமொருதசமனைமாய்துயரம்
போயகலவொழித்துநீயேதசமனெனவும்
புகலுதல்போற்சுபாவசித்தமாகுவதேயன்றி. (கஉரு)

ஒருமலர்க்குத்துறக்கமெனல்போன்முத்திவிருப்ப
முதவருத்தவாதமெழிற்பதுமையைத்தேவெனல்போ
லிருமைதருமுபாசனுபரமநுடன்றன்னை
யிந்திரனென்பதுபோலத்துதியரமாளினையே

யருமரசென்பதுபோலவுபசாரிகந்தா
னக்கினிமாணவகனெனும்வாக்கியமேபோல
வுரிமைதருசுகுணசாதிரிசமிதுகோவி
னுடம்பென்கைபோற்சாதிவியத்தியாமன்றே. (௧௨௬)

கடத்தொடுமட்கனணியமென்வாக்கியமேபோலக்
காரியகாரணநீலோற்பலமெனும்வாக்கியம்போல்
விடுப்பில்குணகுணிதயிர்பாற்கபேதமென்ல்போல
விகாரமேவாரிகனங்கட்கேகமெனல்போ
லடுத்தவங்கிசாங்கிசவிம்பப்பதிவிம்பங்களினுக்
கயிக்கமெனல்போல்விம்பப்பதிவிம்பவாத
மெடுத்துணரிலெனவிங்ஙன்பேதபரமாக
விசைப்பனவெலாஞ்சுருதிவிரோதமெனவறியே. (௧௨௭)

அவ்வகிலங்கட்கெலாம்பொய்ம்மையேபுகலு
மரியதாம்வேதாந்தபக்கமதிவிளைய
வெவ்வமறுசுருதிவிசாரத்தினுலுண்மை
யெனுமுத்திகூடுமெனலெவ்வாறிங்கென்னி
லவ்வியமென்சொற்பனமாதணைவினுன்மெய்ம்மை
யாயவீரியவொழிவுங்கற்பிதமாம்வடிவிற்
செவ்வியவொண்கடவுள்வழிபாட்டினுலிட்டஞ்
சேர்தலும்போனூலுணர்வான்முத்தியுஞ்சித்திக்கும் (௧௨௮)

அருமையெனுமுத்திவிலக்காகமுன்றுளவா
மஞ்ஞானமையம்விபரீதமெனவவற்றுட்
பிரமமலநானென்கையஞ்ஞானநானப்
பிரமமோவலனோவென்றிடலையஞ்சுருதி
வருமினியவுத்திகளானன்பரமாயினுமுன்
வளர்சீவபாவமுண்டென்குதல்விபரீதந்தான்

றுமுறையிலஞ்ஞானிகட்குமூ ரணுகுஞ்
சவணமொடுமனன நிதித்தியாசனங்களன்றே. (௧௨௯)

ருதகாதிகளினிடைச்சுருதிவிசாரத்தாற்
றணிவுதோன் றுதலெனவேசிவமொடுயிரயிக்க
மோதுமாரணமொழியின்றாற்பரியங்கேட்கை
யுயர்சவணங்கேட்டபொருளுத்தியிற்சிந்தித்த
றீதின்மாமனனமவற்றாற்றுணிந்தபொருளிற்
சித்தமசைவறவிருத்தனிதித்தியாசனந்தான்
மேதையாகியசவணஞானத்தாலான்மா
மெய்ம்மையாமுக்கியத்தாற்சவணமங்கியெனலாம். (௧௩௦)

ஏனையவோரிரண்டுமதன் றுணையெனலாலங்க
மெனலாகுமஃதெவ்வாறெனிற்பொருள்கடிகழ்த்து
மானதோர்சுடரசைவிற்கருமவலியின்று
மாதலினல்வளிதடுக்குந்திரையெனலாமனன
மேனியிர்வான்றிரிதூண்டியொளிர்வித்தல்போலும்
விளம்புநிதித்தியாசனமென் றறிந்திடுகதெரிந்து
மோனயாமெனவுரைத்தசிரவணத்திற்குள்ள
முறையிலறுவகையிலிங்கதாற்பரியமுரைப்பாம். (௧௩௧)

அவையுபக்கிரமமுபசங்காரமுடனே
யப்பியாசம்பினபூர்வதைபலமொடுற்ற
நவிலருத்தவாதமுபபத்தியெனலாகு
நற்சிருட்டிமுன்சகமெய்ப்பரமாயிற்றென் றுஞ்
சிவமதற்குச்சுவகதாதிகளிலையென் றகண்டஞ்
செப்புமதேயுபக்கிரமஞ்சகஞ்சிவத்தின்மாய்த்துப்
பவமகலத்துரியற்குப்பிரமமுடனயிக்கம்
பகர்ந்தத்துவிதங்கூறலுபசங்காரந்தான். (௧௩௨)

கூறுமிவையிரண்டுமோரிலிங்கமெனவறைவர்
கூடத்தனேபிரமமெனமறிந்துமறித்தாங்
தேறவுரைத்திடலப்பியாசமாந்துரியன்
றிகழ்பிரமாணாதீதனென்கையபூர்வதையாம்
பாரிலுயிரொன்றறிதலெலாமறிதலென்கை
பலம்பிரத்திகான்மவுருவாம்பிரமந்தனக்கு
மாறரியவைந்தொழிற்கத்துருத்துவஞ்செப்புறுதல்
வயங்கருத்தவாதமெனமதித்திடுகதெரிந்தே. (௧௩௩)

கடத்தினுக்குமண்ணிணையுநூற்குலண்டுதனையுங்
காரணமென்பதுபோலப்பிரமமேமுன்னம்
படைத்தசகத்காரணமென்பதுவேதிட்டாந்தம்
பகருத்திதர்க்கமனுமானமிவைமூன்று
மடுத்துவருமனசகாரிகளாமவற்று
ளாருயிர்களனேகம்வியாபகமெனவேகூறுந்
தடுப்பரியசாங்கியமேமுதலாயமதத்துட்
சாற்றுமுயிரெலாமுடம்புதொறும்புணர்ச்சியுறலால் (௧௩௪)

இந்தவுடம்பிவற்கேயாம்போகசாதனமற்
றேனோர்க்கன்றெனிற்போகத்திதிபுகலொணாதாம்
வந்தவுடம்பெத்திறத்துமிவன்வினையான்வரலான்
மற்றிவற்கேயெனின்வினையுமெவர்க்குமிலையோதான்
முந்தையுடம்பபிமானத்தாற்செய்வினையிவற்கே
முற்றுமெனினவ்வபிமானமுமுந்தையுடல்சே
ரந்தவுயிரனைத்திற்குமிலையோதானிவ்வா
றனவவத்தைநீக்கிலரிதனுதியுயிரெனலால். (௧௩௫)

செப்பரியவேகான்மபக்கத்திற்போகத்
திதியிலையென்றனேகான்மபக்கமதுகொளினு

மிப்பரிசுமிகுயோகத்தினிகூடாதாயிற்
றிச்சங்கையிருமதத்துமொக்குமேயென்னிற்
பற்பலவிலேகாண்மபக்கமதில்விம்பப்
பதிவிம்பநியாயத்தாற்காரணவசைவாதி
மெய்ப்பரியபலதிறத்தாலென்னிகழ்ந்தயோக
விளைவுகூடுதலெளிதென்குருவுத்தியாமால். (௧௱௬)

தருக்கவனுமானவிலக்கணங்கடாமிசிரா
சாரியர்கண்முதலானோர்கண்டநூதிகளில்
விரித்தமைதலாலிதுதான்சுவானுபவநூலாய்
விளங்குதலாலீண்டுரைப்பிற்பெருகுமெனுங்கருத்தா
லுரைக்கிலமந்திரயோகம்பரிசயோகம்பி
னுயர்பாவயோகமுடனபாவயோகந்தான்
றெரித்தமகாயோகமெனுமிவைகளோரைந்துந்
திகழ்கின்றநிதித்தியாசனவடிவமாமால். (௧௱௭)

ஓங்காராதிகளனுசந்தானத்தாற்பரத்தி
லுள்ளமடங்குதலேமந்திரயோகமதனோ
டிங்காகுமனபவனமொன்றாய்மூலத்தி
னிருஞ்சுழினைவழிசென்றுசென்னிநடுவிருந்த
தேங்காண்மவொளியின்மனோலயமாதல்பரிசஞ்
சிரந்துறக்கஞ்செவிதிசைகளிருசுடர்கள்விழிதி
பாங்காயமுகமுந்திவிசும்புநிலம்பதமாம்
பரமனுருவாயவிராட்புருடவடிவெனினும். (௧௱௮)

அன்றியளவறுபெருந்தோட்படையணியோடுற்ற
வண்ணல்வடிவெனினுநினைந்தவயவங்கடம்மி
லொன்றொன்றைவிடுத்தநின்றவயவிமாத்திரமா
முண்மையாம்பிரமத்தின்மனமடங்கல்பாவஞ்

சென்றளவுகரணமுருவொருபிரமந்தன்னிற்
சிந்தையடங்குதலபாவம்படைப்பிலொழிவிற்
றன்றெரிதறெரியாமையிடத்திரேனோர்பரிசாய்த்
தன்வடிவாம்பிரமத்தின்மனமிறன்மாயோகம். (கஙக)

பகர்ந்தவுயிருண்மைவிலக்காகவரும்பூதப்
பதிபந்தம்வர்த்தமானப்பதிபந்தம்பி
ணிகழ்ந்தவாகாமியப்பதிபந்தங்களெனமுத்தி
நேயமொடுதுறந்துகுருபரனையறிந்தடைந்து
மகிழ்ந்துசவணாதிகமுற்றிடினுமுன்னுகர்ந்த
வனிதாதிவிடயசுகவாதனையாற்றினமும்
புகுந்துமனநிலைகலக்கியுயிருண்மையுருமற்
போக்கிடறனைப்பூதப்பதிபந்தமென்பர். (கசഠ)

மடிவிடயாசத்தியபிமானமொடுகுதர்க்க
மருகுறுசிற்றினன்சேர்தல்சபலத்துவாதி
யடைதலின்மெய்தெரிந்துமுயிருண்மையுருதழித்த
லதுவாகும்வர்த்தமானப்பதிபந்தங்காண்
விடலரியசனனமினுஞ்சிலவடைந்தாலன்றி
விடாதுபிரமாதியுலகிச்சையெனுந்தோட
மொடுமருவிமறைப்பொருளையுணர்ந்திடினுமான்ம
வுண்மையுருதழித்தலாகாமியப்பதிபந்தந்தான். (கசக)

பந்தமவைமூன்றினையுங்கடந்திடுவான்பயில்வ
பகர்ஞானம்வயிராகமுபரதியாமவற்றின்
வந்தணுகுமிலக்கணங்காரணமொடுதான்சொருப
மருவுகாரியமெனவேதனித்தனிஞானக்கு
முந்துசவணாதிகமேகாரணமான்மாவு
மூலவகங்காரமும்வேறுகுதலேசொருபம்

ர்துமகங்காரகதமயற்குத்தான்கரியாய்
னுறுதலேகாரியமென்றறைகுவர்மூதறிஞர். (கசஉ)

வேண்டும்வயிராக்கியத்திற்குற்றவனிதாதி
விடயத்தினிலையாமைமுதலாயகுற்றங்
காண்டலதுகாரணமெத்திறத்தானுமதனைக்
கழன்றிடுதல்சொருபம்பின்புறுமைகாரியமா
மாண்டவுபரதிக்கியமாதிகளேகாரணஞ்சூழ்
மனமொடுங்கல்சொருபமாம்புறக்கருமந்தன்னின்
மீண்டுபுகுமயலறுதல்காரியமென்றிசைப்பர்
விளம்புலுறுஞானதிகட்கவதிமொழிவாம். (கசந)

தக்கதேகான்மபாவம்போலப்பிரமந்
தானென்னுந்திண்மைஞானத்தினுக்காமவதி
மிக்கபிரமாதிபதந்துரும்பெனவேநினைத்தல்
விளம்பும்வயிராக்கியத்திற்கவதிசுழுத்தியன்போற்
றுக்ககருமங்களனைத்தினையுநினையாமை
தோன்றுமுபரதிக்கவதியாகுமவைமூன்றும்
புக்கொருவனடைந்திடுமேலதுமுன்னம்விடாது
புரிந்தமாதவத்தின்வலியென்றறிகதெரிந்தே. (கசச)

குறையகலும்வயிராக்கியமுபரதியாமிரண்டுங்
கூடிஞானங்கூடாதாயின்முத்தியரிதா
முறுமினியமிசையுலகபதங்கிடைக்குஞான
மொன்றுமடைந்தவையிரண்டுமிலையாயினிற்ப
முறியுமரநெடும்பணையோன்விழுநினைவின்றியினு
முறியவிழல்போலவேதேகாந்தமதனிற்
பெறுவனுயர்முத்தியினையுடற்கஃமந்தவினையாற்
பிறந்திடுந்துக்கானுபவமுளதாதறிண்ணம். (கசரு)

சாற்றரியசுபேச்சைவிசாரணைதனுமானசிசத்
வாபத்தியசம்சத்தியொடுபதார்த்தபாவனையே
மேற்றுரியகாமியெனுமிவற்றினைமூதறிஞர்
விளங்குசத்தஞானபூமிகையென்பரவற்றுட்
டோற்றிடுநான்மூடனுயிருந்தகாரணமென்
சுருதிகுருவாலறிவலெனநினைதல்சுபேச்சை
மாற்றரியசுருதிகுருவாற்சிறிதுதோன்றும்
வயிராகத்துறுதல்சதாசாரம்விசாரணையே. (௧௪௬)

மருவலுறுசுபேச்சைவிசாரணைவலியால்விடய
வலியறுதருன்றனுமானசியவற்றின்பயில்வால்
விரவுநனவாயவுலகினைக்கனவென்றெண்ணி
மெய்த்தவான்மாவுண்மைகருதல்சத்வாபத்தி
பரவலுறுமுலகுதோன்றுசுழுத்தியன்போற்
பகரறிவுமாத்திரையாய்நிற்றலசம்சத்தி
யொருவிவாசனையனைத்துமிகுதுயிலோன்போல
வுயிரானந்தத்தொடுங்கல்பதார்த்தாபாவனையாம். (௧௪௭)

உண்டிலையென்றுமலகங்கிருதிநிரங்கிருதி
யுருமலறிவுருவாயவத்துவிதபதத்திற்
கண்டதொருவறுங்குடம்போலுட்புறஞ்சூனியமாங்
கதிதுரியகாமியாமுபாதியையடைந்து
கொண்டிலகலுறுதிரிசியானுவேதம்பின்
கூறலுறுசத்தானுவேதநிருவிகற்ப
மெண்டருசட்சமாதியாம்புறமொடகமென்னு
மிருபேதமடைந்தவற்றைமுறையினிவண்மொழிவாம். ()

கடாதிவிடயத்தினொன்றினைக்குறித்துநாம
கற்பனையோடுருவமெனுமாயையதன்றிறத்தைத்.

நாடாதுவிடுத்தத்திபாதிப்பிரியமென்னுஞ்
சச்சிதானந்தமாம்பிரமத்தின்றிறத்தை
விடாதனுசந்தானஞ்செய்திடுதலேபுறத்து
மெய்த்திரிசியானுவேதப்பெயர்கொள்கின்ற
கெடாததொருசவிகற்பசமாதியெனலாகுங்
கிளர்ந்தபுறச்சத்தானுவேதமதுகிளப்பில். (௧௪௯)

சச்சிதானந்தவுருவாகுவதேபிரமந்
தானெனவேதியாநித்தலதுவாகுமென்க
விச்சமாதிகள்பயின்றவலியினாற்றோன்றா
திரும்பிரமானந்தநிலைதனின்மனஞ்சென்றொடுங்கி
நிச்சலமாயலையில்கடல்போலிருத்தல்புறத்து
நிருவிகற்பசமாதியாமஞ்ஞேகதகாமாதிக்
கச்சமறுகரிதானென்றெண்ணுதலுட்டிரிசி
யானுவேதப்பெயர்கொள்சவ்விகற்பசமாதி. (௧௫௦)

சங்கமறுசச்சிதானந்தவொளிவுருவந்
தானெனச்சிந்தித்திடலுட்சத்தானுவேதம்
பொங்குறுதன்னனுபூதிரசந்தோன்றுமதனாற்
புகன்றதிரிசயஞ்சத்தமெனுமிரண்டுமகன்றே
யிங்கசைவிறீபமெனப்பந்தமறவிருத்த
லிலங்குறுமுன்னிருவிகற்பசமாதியிவ்வாறனுந்
தங்கலுறவொழுகுமியோகிக்குமனமெங்குச்
சரிக்குமாண்டாண்டெலாஞ்சமாதியெனலாகும். (௧௫௧)

தக்கமாஞானபலநான்குதுக்காபாவஞ்
சர்வகாமாத்தியொடுகிருதகிருத்தியமே
தொக்கபிராத்திப்பிராப்பியங்களெனவவற்றுட்
சொல்லியதுக்காபாவமிகபரத்தாலிரண்டாம்

பொய்க்குமோர்ஜாலவுடம்பொழிவொழிநீராற்றம்
புழுபிணிகண்முதலனவுஞ்சூக்குமதேகத்து
மிக்ககாமாதியுங்காரணத்திலவ்வாதி
வியாதிகட்குவித்தாம்வாசனையுமிகத்திடும்பை. (௧௫௨)

மித்தையெனுமாயாகாரியவுடம்பாதிகளின்
வேறாயஅரியஞானத்தின்மேலாக
வைத்தவொருபோகபோக்குருக்களிலாமையினல்
வரஞானிக்கவ்விடும்பையுமென்றுமிலாதிருத்தல்
பொய்த்தவிகலோகதுக்காபாவமெனலாகும்
புண்ணியம்வந்தென்றுபோம்பாவமெனநின்ற
சித்தமுறுசிந்தனையேபரலோகதுக்கந்
தெரியினெனப்புகன்றிடுவர்திருக்கறநல்லறிஞர். (௧௫௩)

ஞானநிலையடைந்துந்தாமரையிலைநீர்போல
ஞானியிருவினையுமுறாமையினலிந்தனத்திற்
றீநணுகுமழலில்விறகிலாதுபோற்கருமஞ்
செயலிலவனுமவனிலஃதிராமையினன்
மானமுனுண்வனத்திலுறாதுபோலஞான
மயனைவினையாவுமுறாமையினலச்சிந்தை
தானவனிலெழாதிருத்தறனையுரைப்பர்மேலோர்
தக்கபரலோகதுக்காபாவமெனவன்றே. (௧௫௪)

எல்லாவாழ்வினையுமுறுஞ்சார்வபௌமாதி
யிரணியகர்ப்பாந்தமாய்மேன்மேல்வேண்டுற்ற
நல்லானந்தங்களெலாம்பற்றிலாவறிஞ
னணுகுதலான்ஞானங்கொண்டறிசிவத்தின்கூறாய்த்
தொல்லானந்தங்களெலாநிற்கையினலவற்குத்
தோமிலகண்டானந்தச்சித்திதோன்றுதலே

பொல்லாதவிளைப்பகையைக்கடந்தபெருந்தவர்கள்
புகன்றிடுவர்சகலகாமாப்தியெனவன்றே. (கருரு)

தத்துவஞானத்திற்குமுன்னாமிங்கடையத்
தக்கவிட்டம்பெறவனிட்டவொழிவிற்கும்வேண்டி
வைத்தவுழவாதிகளாந்துறக்கமுதல்பெறற்கு
மகமுதலாயினவுமுத்திசாதனமாகுமான
சித்தியுறமிகுசவணாதிகளுமமிருதற்குச்
செய்வனவாந்தத்துவஞானத்தின்பின்குடும்பப்
புத்தியொடுபலபோகத்திச்சையிலாமையிலுறற்
புகன்றவுழவாதிதொழில்யாவுமிலையாமால். (கருசா)

வந்துசிறுசாளரத்திற்றோன்றுபரமாணு
வான்கதிரின்மிகுமொளியிற்றோன்றிடாவாபோல்
னந்தவுறுசிற்றறிஞன்விடயமாங்கரும
ஞானியிடைத்தோன்றாமையாலியற்றத்தக்க
மூன்றுமகமுதலனவிங்கிலைபிரமானந்த
முதலுண்மையெய்தலாற்சவணாதியெல்லாஞ்
சிந்தையுறவியற்றுமனவாகுமதாலிதுவே
செப்பியவக்கிருதகிருத்தியத்துவமென்றறியே. (கருஎ)

முற்றவுருவிசிட்டபுண்ணியபரிபாகந்தான்
முத்திவிருப்பரியகுருவழிபாடுபெருநூல்
வெற்றிதருசவணாதியறிவழியாமைகளின்
விவேகமிகுமஞ்ஞானவழியொடுதன்னுண்மை
பெற்றசமுசாரதுக்கநிவிர்த்திநிசானந்தப்
பேறெய்தலேபிராத்திப்பிராப்பியமாம்
பற்றுமுயர்முத்திவகையிரண்டாகுமவைதாம்
பகர்சீவன்முத்தியொடுவிதேககைவல்யம். (கருஅ)

அறிவுடையார்க்ககமான்மாவொடுவருசம்பந்த
மகலின்றிப்பிறருடல்போற்றனதுடலந்தனிலு
மமதிதருமபிமானமின்மையேயாகி
யுன்னுமனுபவவொப்பால்வருபிராரத்த
வநுகர்வுண்டாஞ்சுழுத்திவலியேபோல
மந்தானுசந்தானமாதலிற்சேகாதி
செறியபிமானங்கழன்றுங்கெடுமிந்துஞ்சுழலுந்
திகிரிபோல்வாதனையானுறல்சீவன்முத்தி. (௧௬௯)

பரமமாஞானந்தோன்றுதலுமேகதிர்முனே
பாயிருள்போலஞ்ஞானந்தனதுகாரியமாம்
புரமுதலாயினவனைத்துமகன்றிடுதலேனை
புகலரியவிதேககைவல்லியமென்றிசைப்ப
ரூரமுறுமிங்கிதுவாகச்சீவன்முத்தியுளதென
றுரைப்பதெவ்வாறெனிற்கயிற்றினரவமயக்கொழிந்தும்
வருமதன்காரியமாகும்பயகம்பமுறுதி
மருவுதல்போன்ஞானத்தாலஞ்ஞானங்கெடினும். (௧௭௦)

அதனதுகாரியமாகுமுடம்பாதிநிற்கு
மதனனும்பிரமஞானந்தோன்றும்பொழுதே
சிதைதருமஞ்ஞானமுடனுடம்பொழியுமாயிற்
றிகழ்பிரமவித்தியாசம்பிரதாயந்தான்
கதியொழியுமதனனும்பரசிவனுற்பிரமன்
கமலனுயர்பிரசாபதியவனன்மனுவாம்
புதமனுவான்மநுடருணர்ந்தனரொனவேமுறைமை
புகல்சுருதிவிரோதமாமதனனுமன்றே. (௧௭௧)

செஞ்ஞானிக்குரித்தாகுஞ்சீவன்முத்தி
சித்தித்தற்குற்றபிராரத்தவாதனையோ

டஞ்ஞானமேலசசற்பாவவுடம்பாட்டா
லாகிலையுஞ்சீடர்க்குபதேசாதிகமு
மெஞ்ஞான்றுங்கிடைத்திடுமாலச்சீவன்முத்தற்
கிரிதருசஞ்சிதமங்கிபுகுமுளிபுற்போல்
மெய்ஞ்ஞானத்தாற்பிராரத்தநுகர்ந்தொழியு
மேல்வினைகூடாதனதிகாரியாதலினால். (௧௬௨).

பெற்றவுயர்ஞானத்தாலொழிந்தவினைதானே
பிராரத்தபோகத்தையளிக்குமெனிலதுமே
லுற்றவுடலுற்பத்திதனையுமியற்றாறுமென்
றுரைப்பில்வறுவிதைநுகர்ச்சிக்கன்றியேமுளைக்கு
மற்றதுதான்காரணமன்றதுபோலஞானி
வருகருமநுகர்ச்சியினாலேயொழிவதாகி
யற்றமுறுபிறவிமேல்வினைதந்திடுதற்கேது
வாகாதென்றியம்புறுவாரிவறிதக்கவரோ. (௧௬௩)

அறைந்தநுகர்வினையதுதான்லோகயாத்திரைக
ளனதிகரித்தாறுநரற்கேயோருடம்புதன்னிற்
செறிந்துநுகர்வாமவற்றினதிகிருதராகிச்
சிறந்தமாபுருடற்குத்தசசங்கையுடம்பி
னுறைந்தலதுதீர்ந்திடாதெனினுமறைப்பின்றி
யுறுதலாலொருவனுக்கிங்கிளைமையுதற்பேதம்
பிறந்திடினுமவனுக்கோருடம்பேயாய்நின்ற
பெற்றிபோலாகுமெனவுணர்ந்திடுகதெரிந்தே. (௧௬௪)

விடையங்களனைத்தினுக்கும்பொய்மைசாதிக்கு
மெய்ஞ்ஞானந்தனக்குமவைக்குண்மைசாதிக்கு
முடலினுகர்வினைக்குமொன்றற்கொன்றுவிரோத
முண்மையினான்ஞானிக்குநுகர்வெங்ஙனென்னிற்

கெடுகனவுமுதலவற்றுண்மைதுறைதிகளாங்
கேடினுகர்வாதல்போற்பிராரத்தபோக
விடயங்களுண்மையாயலதாகாதென்னும்
விதியின்மையானுகர்வுமுணர்வுமுராறுவால். (௧௬௫)

வந்தமயலொழிந்தளவேயிப்பியிடைவெள்ளி
மாய்தல்போலறிவினாலஞ்ஞானங்கெடலு
மிந்தவுலகனுதோற்றமேயிலாமையினு
லெங்ஙனமாம்வினைப்போகநுகர்ச்சியெனிலிப்பி
தந்தவிரசிதநிருபாதிகப்பிரமையாகுந்
தன்மையாலுணர்ந்தளவில்வெள்ளியுருவொழியும்
பந்தமுறுமிதுசோபாதிகமாகுமிதனாற்
பகர்ந்ததுபோலன்றுமற்றெங்ஙனெனிலுரைப்பாம். (௧௬௬)

தடத்தினுயர்கரையமர்வோனத்தடத்துப்புனலிற்
றனதோமுகமாகவிருப்பதுபொய்யென்று
படைத்ததெளிவுளமொடிருப்பினுமதோமுகமாம்
படிவந்தோன்றுதல்போலமூலவகங்கார
மடுத்துவருசீவபாவாதிகமோமித்தை
யறிதுரியன்றானெனவேயுணரினுஞ்சீவாதி
தொடுத்தவுலகுறுதலினாற்சீவன்முத்தன்றனக்குத்
துய்க்கும்வினைப்போகவிவகாரமுடம்பாடாம். (௧௬௭)

சீவன்முத்தற்குரியனவாமயித்திரியேகருணை
திகழ்முதிதமுபேட்சையெனுஞ்சற்குணங்களவற்றுண்
மேவுறுசற்புருடரொடுநட்புமயித்திரியா
மெலிதருதுக்கிகளிடத்தினிரக்கமேகருணை
யோவறுநற்புண்ணியர்பால்விருப்பமேமுதித
முவப்புவெறுப்பிரண்டுமிலாதுலகதனிலியற்றும்

பாவிகளை விடுதலெயுபேட்சைமெயனவறிகப்
பயனெந்தச்சிவன்முத்தற்குளவவையீண்டுரைப்பாம். (கசுஅ)

ஞானரக்கைதவஞ்சகலசம்வாதமுடனே
நவிறுக்கவொடுக்கமொடுசுகாவிற்பாவந்தா
னனவற்றுண்மருவும்வாசனையழிவுமனத்தி
னடக்கங்களாற்புத்திநிருமலமாயிருத்தன்
ஞானரக்கைமனம்பொறிகட்கொருமையேதவமா
ஞானியெனவுலகமெலாம்வழிபடல்சம்வாத
மானமனக்கிலேசமறலே துக்கவொடுக்க
மவற்றினற்பந்தமறல்சுகாவிற்பாவந்தான். (கசுக)

குறிகளோர்பத்துளவாம்ஞானமயற்கவைதாங்
குரோதமின்மைவயிராக்கியம்பொறிபுலன்களடக்க
லறமுதவுசமைதமையேசனப்பிரியத்துவமோ
டலோபமொடுகொடையயபயநிருமதமென்றறிக
நெறிமருவுசீடரொடுபத்தருதாசீனர்
நிலையில்பாவிகளென்னுநால்வகையோரிடத்து
முறையினனுக்கிரகம்வந்துறுமருள்கொள்சீவன்
முத்தனுலென்பரவைமுறையினெடுத்துரைப்பாம். (கஎ௦)

தெரிவரியசீவன்முத்தன்றனைநம்புமதனுற்
சீடற்குமுத்தியுமன்பொடுவழிபாடதனைப்
புரியுமுயர்பத்தற்குநல்வினையுமவன்றன்
புனிதமுறுசரிதமதுகண்டவுதாசீனர்க்
குரியபுண்ணியவிருப்புமவன்றன்வடிவினைக்கண்
ணுறுதன்முதலானவற்றாற்பாவிகட்குப்பாவ
விரிவுமுறுமென்பர்தருக்காதியாலாத
லெவ்வெனினின்முத்தனுற்பிரமோபதேசம். (கஎக

மறைப்பகலுமொருபிரமசொருபமாதலினன்
மகிழ்ச்சிவெறுப்பிலாவீசற்கனுக்கிரகஞ்செயவு
மொறுப்புறவும்வரும்வினையினோராலத்தொழில்க
ளூறுதல்போற்சாதகர்தம்பக்குவபேதத்தாற்
சிறப்புறுநல்லுபதேசாதிகண்ஞானிக்கெய்துஞ்
செப்பியவிவ்விலக்கணமொடிராதுபலமுறையாற்
றுறப்பிலருட்சீவன்முத்தரிருப்பதென்கொலென்னிற்
றுணிவுதோன்றுறமுதுநூறொருகுத்தபரிசுணைப்பாம். (௧௭௨)

வந்தணையும்பிராரத்தவாசனைதீவிரமே
மத்தியமந்தஞ்சுத்தமெனவொருநான்காகும்
பந்தமறுஞானியாயினும்போகத்தழுந்திப்
பசுப்போலத்தன்மகிழ்ச்சிமாத்திரமாயிருத்தன்
முந்துரைசெய்தீவிரம்போகச்சிறப்புற்றிடினு
மொழியான்மதற்பரனாய்வினோதமேபுரிந்து
மைந்தரெனவிருத்தன்மத்தியம்போகமனைத்து
மாற்றிமிதுனம்போலானந்தமுறன்மந்தம். (௧௭௩)

உலகவழக்ககன்றுநிருபாதிகான்மாவி
லுற்றதற்பரனாகிப்பரமுத்தனெனவே
யிலகுசுகத்துடனிருத்தல்சுத்தவாசனையா
மென்பரிந்நால்வகையாகுங்கருமவாசனையாற்
றலைமைகொண்முத்தர்கள்வேறுவேறாயவொழுக்கஞ்
சாரினுஞ்செந்நெறிகோணநெறிபெருமாநதிக
ளலைகடலிற்புகுதல்போன்முடிவின்மெய்ப்பரமா
யமர்தருநன்முத்திசுகமொருபரிசென்றறியே. (௧௭௪)

இச்சையுடனிச்சைபிறரிச்சையெனுமிவற்றா
லியம்பலுறுபிராரத்தமூன்றுவகைப்படுமா

ச்சுரர்களானும்விலக்குதற்கரியவாகு
மபத்தியஞ்செய்திடறனக்கேகேடெனவிங்கறிந்தும்
வச்சுமதுபுரிவித்தலிச்சைசெய்யேனெனினு
மன்னவர்தம்மாணைபோற்செய்வித்தலனிச்சை
யிச்சைசயனிச்சைகளின்றியிருந்துமயலோரா
லின்பதுன்பநுகர்வித்தல்பிறரிச்சைவினையாம். (கஎரு)

இப்பரிசுமூவகையாம்பிராரத்தவினைவா
லெண்ணில்பலவொழுக்கமாஞ்சீவன்முத்தற்கிந்த
மெய்யப்பொருளைவதிட்டனாரதன்றுருவாசன்சீர்
வியாதனொடுசுகன்வாமதேவனருட்சனக
னொப்பரியபரதனெழிற்கௌதமனேமுதலா
யுளர்வருத்தனுபேதமுணர்த்தலுறுமிங்ஙன்
றுப்புதவுபிராரத்தங்கொளினஞ்ஞானிக்குஞ்
சுத்தனுக்கும்வேறுபாடெங்ஙனெனின்மொழிவாம். (கஎசு)

மண்ணுலகில்விராத்திரியர்சோத்திரியர்தமக்கு
மறையொழிதலோதலாலன்றியுணன்முதலா
யெண்ணவருசெயலான்வேறிலாமையதுபோல
விதயபந்தமுறலொழிதலாலன்றிப்போக
மூண்ணுநிலையதனலஞ்ஞானமுடையோர்க்கு
முணர்வுமயமாய்நின்றசீவன்முத்தர்தமக்கு
நண்ணிவரும்வேறுபாடிலையெனவேநவில்வர்
ஞானநூல்பலவுணர்ந்தநல்லுணர்வினவரே. (கஎஎ)

தத்துவஞானத்தினாற்பிரமமடைந்திடுமேற்
றறுகண்வரிப்புலிகண்டோன்போற்சீவத்துவத்தை
யத்தலையேயழித்திடுமாதலினாலச்சீவ
னழிவுதனக்குடன்படுமோவெனிற்கடவுட்டன்மைக்

சூய்த்தவாதரவினூற்கங்கைமுதலவற்று
ளொழிப்பதனுக்கிசைவரத்துவமதுபோலென்றும்
பொய்த்தலிலாத்துரியவடிவாம்பிரமத்துவத்திற்
பொருந்தத்தன்கேட்டினுக்கிங்குடம்படுஞ்சிவன்றான்.

வாதராயணன்முதலோர்போற்சாபமுடனே
மற்றருள்செய்வலியுடையோன்றத்துவஞானத்தோ
னேயிலானலனெனிலவ்வலிதவத்தின்பலமா
மிலங்குதத்துவஞானபலமன்றாமாயின்
மாதவமேஞானத்திற்கேதுவெனுஞ்சுருதி
வழக்கினூற்றவமிலர்க்குத்தத்துவஞானந்தா
னேதெனிலாஞ்சாபாதிக்குச்சாகாமியமே
யேதுநிட்காமியதவஞானத்தினுக்கென்றறியே. (௧௭௧)

வேதவியாசாதிகட்குஞானம்வலியிரண்டு
மேவுமேயெனிலவர்கட்கிருதவமுமுளவா
மாதலினூலவ்விரண்டுமாகுமோரோர்தவமே
யாயினெவ்வொன்றேயடையுமதனன்மாறின்றா
மேதையாஞ்சாபாதிவலியிலர்களாகி
விதியிறத்துவஞானிதனைக்கிரியாநிட்ட
ரோதுவார்நிந்தையெனிலவர்தமக்கும்விடயத்
துழல்பவராநிந்தையாதலிற்குறைவின்றாமால். (௧௮௦)

உலகிறந்தசிவன்முத்தனுகர்வினைவாசனையா
லுண்பொருள்கள்பலகவர்ந்துமௌனமேயுற்றும்
பலதிறங்கண்மொழிந்துமுபதேசநெறிபுரிந்தும்
பாதவித்துமகிழ்ந்துமிகுவேடங்கள்புனைந்துங்
கலைதுறந்துமுடையுடுத்துங்கல்விபலபயின்றுங்
கல்லாதுமாதர்முயக்கிடையுற்றுமிவ்வா

றலகிறந்தநடையுறினுமருள்விளையாட்டென்றே
யவன்றனைநம்புகவையமொருசிறிதுமுறாமல். (௧௮௧)

என்றுமெவ்விடத்தினுமோருடம்புமுறாதொன்றா
யிருந்தசச்சிதானந்தசிவசொருபமாத
னன்றிதருவிதேககைவல்லியமென்றிசைப்பர்
நவின்றவதையெய்துமாறெவ்வாற்றானென்னிற்
பொன்றலினித்தியகருமானுட்டானந்தன்னாற்
புண்ணியமப்புண்ணியத்தாற்பாவவொழிவதனாற்
குன்றலறுசித்தசுத்தியதனாற்பொய்க்குடும்பக்
குற்றமிகழ்வதனான்மெய்த்துறவுதுறவதனால். (௧௮௨)

முத்திவிருப்பதனானேபுறக்கருமவொடுக்க
மொழிந்ததனால்யோகநிலைமுயற்சியதுதன்னாற்
பொய்த்தலறுதுரியவிழைவத்துரியவிழைவாற்
புகலருமாவாக்கியவாராய்ச்சியதனானே
யத்துவிதஞானமதனாலவிச்சைநாச
மதனாற்பொய்த்துவிதமயக்கழிதலதனானே
மெத்துசுகதுக்கநினைவொழிவதனால்விருப்பு
வெறுப்பறுதலதனாலொண்விதிவிலக்கோய்வதனால். (௧௮௩)

வினையிரண்டுமகறலதனாற்றேகபாவ
விச்சிந்தியதனானேபாசமெலாமொழிதல்
பினையகறந்தவதனானேபராபரமாய்முடிவாய்ப்
பெயர்சாதிகுறிபெறாதொன்றாகிவாக்கு
மனமிறந்துநித்தியானந்தமயமாகி
மறிவிலாவிதேககைவல்லியம்வந்தெய்து
மௌனமறிந்துணிந்திடுகசுருதிகுருபரனு
லின்பவீடடையுநெறிவிரும்புறுமுத்தமனே. (௧௮

வேதமுதலாகிய நூலனைத்தினுஞ்சொல்பொருளை
விளங்கியிடக்கரதலாமலகமெனக்காட்டிப்
போதமயமாகியபேரானந்தத்தழுத்தும்
பொருவிகந்தவிந் நூலைமுத்திபெறற்குரிய
சாதனநான்கினையுமடைந்தெவரானுமென்றுந்
தடுப்பரியபிறவிநோய்தணிப்பதனுக்கெண்ணி
யாதரவினருட்குரவன்றனைத்தேடியுருகு
மன்புடையோர்தமைக்காணினளித்திடுகவுவந்தே. (கஅ௫)

வேதாந்தசூடாமணி

முற்றுப்பெற்றது.

# பரிசோதன பத்திரம்.

## அஞ்ஞவதைப் பரணி.

| பக்கம். | பாடல். | வரி. | பிழை. | | திருத்தம். |
|---|---|---|---|---|---|
| ௰௧ | ௰௨ | ௧ | பெறுத்த | ... | பெருத்த |
| ௰௮ | ௧ | ௨ | துநா | ... | திரை |
| ௰௯ | ௨ | ஷை | கொன் | ... | கென் |
| ஷை | ௩ | ஷை | ஞெ | ... | ஞே |
| ௨௯ | ௬ | ஷை | மிகம | ... | மிகவ |
| ௩௧ | ௮ | ௧ | முருவு | ... | முருகு |
| ஷை | ௰ | ௨ | தொர் | ... | தோர் |
| ௩௯ | ௰ | ௧ | மொன் | ... | மென் |
| ௬௧ | ௨௮ | ஷை | றும் | ... | று |
| ௪௨ | ௩௧ | ௨ | வுங்ச | ... | வங்கிச |
| ௪௩ | ௪ | ௧ | டரு | ... | டறு |
| ௪௫ | ௰௧ | ஷை | யும் | ... | மாய |
| ௪௯ | ௪௩ | ஷை | த்தா | ... | ற்று |
| ௫௧ | ௩ | ஷை | டீனு | ... | டினு |
| ஷை | ஷை | ஷை | வொ | ... | வோ |
| ஷை | ௫ | ஷை | சூழு | ... | சூழ |
| ௫௭ | ௬ | ஷை | இ௩த | ... | இந்த |
| ௫௮ | ௰௫ | ஷை | வான | ... | வால |
| ஷை | ௰௯ | ௨ | மிலத | ... | மிலர |
| ௯௮ | ௭ | ௧ | தொர் | ... | தோர் |
| ௯௯ | ௪ | ௨ | மாதே | ... | மாவே |
| ௭௫ | ௰௪ | ஷை | முடியி | ... | முடிவி |